பக்கங்கள் 16+3

# மாலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 20 செவ்வாய்க்கிழமை 05.08.2025 | அதிர்வு 05 |
|---|---|---|---|

## ரணிலின் வெளிநாட்டுப் பயணம்: சி.ஐ.டியில் ஆஜராகி சமன் வாக்குமூலம்!



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்க நாயக்க, 02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## சபாநாயகருடன் நாமல் தர்க்கம்!

நிலையியற் கட்டளை 98 இன் பிரகாரம் நீதிமன்றத்தில் விவாதிக்கப்படும் வழக்கு தொடர்பான ஒரு விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்ததைத் தொடர்ந்து சபாநாயகருக்கும், நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின் போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த நாமல் ராஜபக்ஷ, 02▶



# தேசபந்து 'அவுட்'

## பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் 177 வாக்குகளால் நிறைவேற்றம்

2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கை முறை) சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்காக முன்வைக்கப்பட்ட பிரேரணை இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. 02▶

# சட்டச் சிக்கல் நீக்கப்படும் வரை மாகாண சபைத் தேர்தல் இல்லை



## தேர்தல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவிப்பு

"மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக அரசமைப்பு ரீதியில் ஏற்பாடு காணப்பட்டிருப்பினும் எல்லை நிர்ணயம் தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு இன்று வரை நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைக்காததால் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் சட்டச் சிக்கல் காணப்படுகின்றது. எனவே, அந்தச் சட்டச் சிக்கல் நீக்கப்படும்போது தேர்தல்கள் ஆணைக்குழுவானது மாகாண சபை தேர்தலை நடத்த எந்தச் சந்தர்ப்பத்திலும் 02▶



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தேசபந்து...**

தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை இன்று முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.10 மணிக்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் நாடாளுமன்றத்தில் (வருகை தராத உறுப்பினர்கள் உள்ளடங்கலாக) முழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர்கள், அதாவது 177 உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். இதற்கு அமைய பெரும்பான்மையான வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வாக்கெடுப்பில் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக எந்த வாக்கும் பதிவாகவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மாத்திரம் வாக்களிப்பில் இருந்து விலகியிருந்தார்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பில் விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறு கோரும் பிரேரணை 115 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் கடந்த மார்ச் மாதம் கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த விசாரணைக் குழுவை அமைப்பதற்கான பிரேரணை 2025 ஏப்ரல் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துர்நடத்தை மற்றும் பதவித் தத்துவங்களைப் பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்வதற்கான குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு அப்போதைய உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேனவின் தலைமையில் மற்றும் நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி. இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவர் ஈ.டபிள்யூ.எம் லலித் ஏக்கநாயக்க ஆகியோரை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது.

இந்தக் குழு நாடாளுமன்றத்தில் கூடி, சட்டத்துக்கு அமைய விசாரணைகளை நடத்தியிருந்தது. விசாரணைகளின் முடிவில் குழுவின் அறிக்கை கடந்த ஜுலை 21ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கையைச் சபாநாயகர் கடந்த ஜுலை 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

விசாரணைக் குழுவின் அறிக்கைக்கு அமைய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள மொத்தம் 23 குற்றச்சாட்டுகளில் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 13, 14, 15, 16, 17, 18, 19, 22, மற்றும் 23 ஆம் இலக்கக் குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளியெனக் கண்டறியப்பட்டது.

இந்நிலையில், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் இன்று பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

---

**சட்டச் சிக்கல்...**

தயாராக இருக்கின்றது."

– இவ்வாறு தேர்தல்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம். சுபியான் தலைமையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பங்களிப்பு மூலோபாயத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அதன்போது கலந்துகொண்ட தேர்தல்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மக்களின் வாக்களிப்பு பங்கேற்பை அதிகரித்தல், தேர்தல் சட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சுதந்திரமான – நியாயமான தேர்தலை உறுதி செய்தல், அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல் பங்களிப்பை அதிகரித்தல் மற்றும் எதிர்காலத் திட்டமிடல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தேர்தல் முறையில் காணப்படும் சில குறைபாடுகளை நீக்கி புதிய சட்ட திட்டங்களைக் கொண்டு வருதல், நவீன தொலைத் தொடர்பு வசதிகளுக்கு ஏற்ப எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் தேர்தல் மற்றும் வாக்காளர் இடாப்புக்குப் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதில் அரச அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் தேர்தல்கள் கண்காணிப்புச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் கலந்துகொண்டு பங்களிப்பு மூலோபாய எதிர்காலத் திட்டம் (2026-2029) தொடர்பான தமது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை முன்வைத்தனர்

இந்நிகழ்வில் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் கே.ஜே.எஸ்.மாதவ, திட்டமிடல் பணிப்பாளர் சன்ன பி.டி. சில்வா மற்றும் தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

---

**சபாநாயகருடன்...**

"நிலையியற் கட்டளை 98 எவ்வின் கீழ், நீதிமன்றத்தில் விவாதிக்கப்படும் வழக்கு தொடர்பான ஒரு விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது .

தேசபந்து தென்னக்கோன் விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் 9 வழக்குகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. எனவே, நீதிமன்ற வழக்கின் முடிவு நாடாளுமன்ற விவாதத்தால் பாதிக்கப்படாது என்பதைச் சபாநாயகர் உறுதிப்படுத்த வேண்டும்.

எனவே, இது தொடர்பாக ஒரு அறிக்கையை வெளியிட்டு பின்னர் விவாதத்தைத் ஆரம்பியுங்கள்." – என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன,

"தொடர்புடைய விதிகளை ஆராய்ந்த பின்னரே, நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த நாள் ஒதுக்கப்பட்டது. இதனால் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும்." – என்றார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்து எழுந்து உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ எம்.பி., தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கும் முன்மொழிவு மீதான விவாதத்தை நடத்துவதன் சட்டபூர்வத்தன்மை குறித்து தொடர்ந்தும் கேள்வி எழுப்பி, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதன்போது அரச தரப்பினர் சிலரும் நாமல் ராஜபக்ஷவுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். எனினும், சபாநாயகர் தான் ஒரு பதிலை வழங்கியுள்ளதாகவும், எனவே விவாதத்தை நடத்த முடியும் எனவும் கூறி விவாதத்தை ஆரம்பிக்குமாறு அரச தரப்பினரைப் பணித்தார்.

---

**சி.ஐ.டியில்...**

குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கினார்.

ஜனாதிபதி நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தில் இன்று முன்னிலையாகுமாறு ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரான சமன் ஏக்கநாயக்கவுக்கு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனால், ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரான சமன் ஏக்கநாயக்க குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தில் இன்று காலை 9.30 மணியளவில் முன்னிலையாகினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் அவர் வாக்குமூலம் வழங்கிய பின்னர் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளர் சாண்ட்ரா பெரேராவும் நேற்று மேற்படி விடயம் தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஓட்டோ சாரதி வெட்டிக்கொலை: 32 வயதுடைய இளைஞர் கைது!

கழுத்து வெட்டப்பட்டு ஓட்டோ சாரதி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொடை, கெட்டபுல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பு, தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மாராம வீதி பிரதேசத்தில் கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதி இரவு கழுத்து வெட்டப்பட்டு ஓட்டோ சாரதி ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

கொழும்பு, மாதம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் தெமட்டகொடை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தெமட்டகொடை, கெட்டபுல பிரதேசத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தெமட்டகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாவகச்சேரியில் சமுதாய அடிப்படை வங்கி விரைவாக அமைக்கப்படுதல் வேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் பணிப்பு





(த.சுபேசன்)

சாவகச்சேரியில் சமுதாய அடிப்படை வங்கிக்கு உரிய காணி தொடர்பாக நீண்டகாலம் இழுபறி நிலவி வந்த நிலையில் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கடந்த வியாழக்கிழமை நேரடியாகச் சென்று தொடர்புடைய தரப்புக்களுடன் கலந்துரையாடல் நடத்தினார்.

சாவகச்சேரி நகர சபையின் சிறுவர் பூங்காவில் ஒரு பகுதிக் காணியை சமுதாய அடிப்படை வங்கிக்கு வழங்குவதாகக் கூறப்பட்டிருந்த நிலையில் அந்தக் காணியை ஆளுநர் முதலில் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

இதன்போது மேற்படிக் காணி சிறுவர் பூங்காவின் தொடர் அபிவிருத்திக்குத் தேவை எனவும், சாவகச்சேரி நகரத்துக்கு அண்மையாக தனங்களப்பு வீதியில் மகிழங்கேணியில் மாற்றுக் காணி வழங்கத் தயார் என்று நகரசபை தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர சபையால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மாற்றுக் காணி தமக்குப் பொருத்தமில்லை எனவும், தமது வங்கிக்கு ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபையுடன் இணைந்த அரச காணியை மீளவும் ஒப்படைக்குமாறும் சமுர்த்தி மகாசங்க பிரதிநிதிகளால் கூறப்பட்டது.

இரு தரப்பும் காணி தொடர்பான இணக்கத்துக்கு வராத நிலையில், 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரச்சினை நீடித்துச் செல்லுவதையும் கருத்திலெடுத்து மக்கள் நலன்சார்ந்தே இரு தரப்பும் செயற்படுவதையும் நினைவில் இருத்தி பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, பொருத்தமான மாற்றுக்காணியை சமுர்த்தி மகாசங்கத்தினர் அடையாளப்படுத்தி வழங்கினால் அதனைக் கொள்வனவு செய்து வழங்கத் தயாராக இருக்கிறோம் என்று சாவகச்சேரி நகர சபை பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச செயலாளர், சாவகச்சேரி நகர சபையினர், சமுர்த்தித் திணைக்களத்தினர் ஆகிய மூன்று தரப்பினரையும் பொருத்தமான காணியை அடையாளப்படுத்தி அதனைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை இரண்டு மாதங்களுக்குள் நிறைவு செய்யுமாறு ஆளுநர் பணித்தார். அத்துடன் இந்த ஆண்டு இறுதிக்குள் வங்கிக்கான கட்டடத்துக்கு உரிய அடிக்கல் நடுகை செய்யப்பட வேண்டும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்த விஜயத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், சாவகச்சேரி பிரதேச செயலாளர், யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், சமுர்த்தி மகாசங்க முகாமையாளர், சமுர்த்தி வங்கியின் முகாமையாளர், கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மட்டு. மகிழவெட்டுவான் பகுதியில் யானை தாக்கி இளம் தாய் மரணம்

## 3 வயது குழந்தை தெய்வாதீனமாக உயிர்பிழைப்பு





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு, ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழவெட்டுவான் பகுதியில் யானை தாக்கி இளம் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 3 வயது குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மகிழவெட்டுவானைச் சேர்ந்த 35 வயதுடைய ரவிச்சந்திரன் பசுபதி என்பவரே யனாய் தாக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

வீட்டின் முற்றத்தில் சம்பவ தினமான நேற்று இரவு 7 மணியளவில் தனது 3 வயது பெண் குழந்தையுடன் தாய் இருந்துள்ள நிலையில் குடிமனைக்குள் உட்புகுந்த யானை அவர்கள் மீது தாக்கியதில் தாயார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளது.

இதை னயடுத்துஉயிர்தப்பியகுழந்தையை மீட்ட அயலவர்கள், உயிரிழந்த தாயின் சடலத்தையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.



# வத்தளையில் குடும்பஸ்தர் படுகொலை: சந்தேகநபர் ஒருவர் வாள்களுடன் கைது!

வத்தளையில் மாடி வீடொன்றில் குடும்பஸ்தர் ஒருவரைக் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் பேலியகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை, அவரகொட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வத்தளை – ஹேகித்த பிரதேசத்துக்குக் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி ஓட்டோவில் சென்ற கும்பல் ஒன்று மாடி வீடொன்றில் இருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையைக் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்தது.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் வத்தளை, அவரகொட்டுவ பிரதேசத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 4 வாள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட இளைஞர் மேலதிக விசாரணைகளுக்காகப் பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனநாயக வாதிகளா? விரோதிகளா?

நீண்ட காலமாக நடத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துங்கள் அல்லது மாகாண சபை முறைமையை நிரந்தரமாக விட்டொழியுங்கள்!

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டிருக்கிறார் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

ஆட்சிக்கு வரும் தரப்புகள் தங்கள் தேவைக்கும், விருப்புக்கும், வசதிக்கும், வாய்ப்புக்கும் ஏற்ப தேர்தல்களை தள்ளிப் போடுவதும் அல்லது விரைந்து நடத்துவதும் மிக மோசமான நடவடிக்கையாகும்.

உரிய காலங்களில் தேர்தல்களை தாமதம் இன்றி நடத்த வேண்டும். அது ஆளும் தரப்புக்குச் சாதகமான சூழ்நிலையை மாத்திரம் இலக்கு வைத்து மேற்கொள்ளப்படக் கூடாது.

எதிர்க்கட்சியில் இருந்த போதெல்லாம் நிலுவையில் இருக்கும் இந்த மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்று வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி, இப்போதுதான் அதிகாரத்துக்கு வந்ததும் அரசியல் சூழ்நிலை தனக்குச் சாதகமானதாக இல்லை என்ற காரணத்தினால் அந்தத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கின்றது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்துவோம் என்று உறுதிமொழி அளித்த தேசிய மக்கள் சக்தி, இப்போது அதிகாரத்துக்கு வந்ததும் அரசியல் சூழ்நிலை தனக்கு சாதகமாக இல்லை என்று கருதி தன் அரசியல் நோக்கத்திற்காக அந்தத் தேர்தலை திட்டமிட்டு தள்ளி வைத்து வருகின்றது.

கடந்த 2017 ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தல் தொடர்பான சட்டம் ரத்துச் செய்யப்பட்டமையினால் நீண்ட காலமாக அந்தத் தேர்தல் நடத்தப்படாமல் இழுபட்டுச் செல்கின்றது.

கடைசியாக மாகாண சபை தேர்தல் நடந்து 11 ஆண்டுகள் கடந்து விட்டன.

அந்தத் தேர்தலை நடத்துவதற்கான சட்டம் 2017 இல் ரத்துச் செய்யப்பட்ட பின்னர் நான்கு ஜனாதிபதிகள் பதவிக்கு வந்து விட்டனர். மூன்று அரசுகள் அதிகாரத்துக்கு வந்து விட்டன. எல்லாத் தரப்பினரும் எதிரணியில் இருக்கும் போது அந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியபடி இருந்தனர். அதிகாரத்துக்கு வந்ததும் அதனை மறந்து, விடயத்தை இழுத்தடித்து வருகின்றனர். அந்த வியாதி இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசுக்கும் தொற்றிக் கொண்டு விட்டது.

ஏற்கனவே ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சி தேர்தல் என்று மூன்று தேர்தல்கள் நடந்து விட்டமையால் நான்காவது தேர்தலை இப்போதைக்கு நடத்த முடியாது, அடுத்த வருடம் பார்ப்போம் என்று ஆளும் தேசிய மக்கள் சக்தி இப்போது சாக்குப்போக்குச் சொல்லுகின்றது.

தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய காலத்தில் நடந்தாக வேண்டும். ஒரு தேர்தலைக் காட்டி இன்னொரு தேர்தலை தள்ளிப் போடுவது - ஒத்திப் போடுவது - எல்லாம் ஜனநாயக விரோதச் செயல்கள்.

தங்களை முழு ஜனநாயகவாதிகள் போலவும், மற்றைய தரப்பினர்களை ஜனநாயக விரோதிகள் போலவும் அதிகம் பேசி வரும் தேசிய மக்கள் சக்தி தரப்பு, இப்போது மாகாண சபைத் தேர்தல் விடயத்தில் முழு ஜனநாயக விரோதிகளாக நடந்து கொள்கின்றார்கள் என்பது அப்பட்டமான உண்மை.

தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு முயற்சியாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்தாமல் - அதை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளித்து அதிகாரத்துக்கு வந்த பின்னர் அதைச் செய்யாமல் - தேசிய மக்கள் சக்தி அரசியல் ரீதியாக சின்னத்தனமாக நடந்து வருகின்றது.

இப்போது இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று வற்புறுத்தும் எதிரணித் தரப்புகள், முன்னர் தாங்கள் ஆட்சித் தரப்பில் இருந்தபோது அதைச் செய்யாமல் நாடகமாடியவர்கள்தான் என்பதும் மூடி மறைக்கக் கூடியதல்ல.

தங்களின் அரசியல் சாதக, பாதகங்களுக்காக தேர்தல்களை நடத்துவதும், தள்ளிப் போடுவதும் அரசியல்வாதிகளின் கீழ்தரமான போக்கு. அந்த பரவணி பழக்கத்தில் தேசிய மக்கள் சக்தியும் வித்தியாசமானது அல்ல.



# வெற்றி என்பது எங்களுக்கு இலக்கானது; உரிய தடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்!

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

விளையாடும்போது வெற்றி என்பது எங்களுக்கு இலக்காக இருக்க வேண்டும். அந்த வெற்றியை உரிய தடத்தின் ஊடாகவே நாங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும். வெற்றியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக குறுக்குவழிகளை நாங்கள் நாடக்கூடாது. அது விளையாட்டின் பண்பல்ல. நாங்கள் நேர்வழியில் போராடி தோல்வியடையலாம். அது குறுக்கு வழியில் வெற்றியைப் பெற்றுக்கொள்வதைவிட சிறப்பானது.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண விளையாட்டு விழா ஓமந்தையிலுள்ள விளையாட்டுத் திடலில் ஞாயிற்றுக்கிழமை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர், விளையாட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து விருதுகளை வழங்கி வைத்த பின்னர் உரையாற்றினார். அவர் தனது உரையில்,

கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவம் விளையாட்டுக்கு வழங்கப்படுவது குறைவு. பெற்றோர்களும் இதற்கு ஒருவகையில் காரணம். கல்வியால் மாத்திரம் ஒருவரின் ஆளுமைகளை மேம்படுத்த முடியாது. ஏனைய துறைகளிலும் குறிப்பாக விளையாட்டுத்துறையில் பங்கேற்பதன் மூலம் எங்களை நாங்களே ஆளுமையுள்ளவர்களாக வடிவமைத்துக் கொள்ளலாம்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் வடக்கு மாகாணம் இன்னமும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருக்கின்றது. விளையாட்டு வீரர்களை நாங்கள் இளமையில் இருந்தே பயிற்றுவிக்க வேண்டிய தேவையும் உள்ளது. மாகாண மட்டத்தில் சாதித்த வீர வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்கவுள்ளீர்கள். கடந்த காலங்களில் எமது மாகாணம் சுவீகரித்த பதக்கங்களை விட அதிகளவு பதக்கங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும்.- என்று குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த வீர, வீராங்கனைகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.







# பசறையில் ஆடி மகோற்சவ தேர்த் திருவிழா!

**(நடராஜா மலர்வேந்தன்)**

பசறை பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள அழகு தெய்வம் முருகப் பெருமான் அருளாட்சி புரிகின்ற ஆலயங்களில் ஆடி மாதத்தில் தற்போது நடைபெற்று வருகின்ற வருடாந்த மகோற்சவ நிகழ்வுகளின் தேர்த் திருவிழா நாளை மறுதினம் 07 ஆம் திகதி வியாழக்கிழமையன்று இரவு நடைபெறவுள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க சின்னக் கதிர்காமம் எனப் போற்றப்படுகின்ற அம்மணிவத்தை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், பசறை நகர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், கிக்கிரிவத்தை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், கோணக்கலை காவத்தை தோட்டஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், டெமேரியா மாத்தன்னை தோட்டம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், கல்குடாவத்தை தோட்ட அருள்மிகு முருகன் ஆலயம் ஆகிய ஆலயங்களின் வருடாந்த ஆடி மகோற்சவ தேர் திருவிழா அன்றைய தினம் பசறை மாநகரை அழகுற செய்யும்.

ஆண்டுதோறும் பக்தி பூர்வமாக நடைபெறும் தேர்திருவிழாவில் பசறை நகரில் அம்மணிவத்தை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் முத்தேர் பவனியும் பசறை நகர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய தேர் ஏனைய முருகன் ஆலயங்களின் தேர் உலா இணைந்த பத்து ஆலங்களின் தேர் பவனி ஓரிடத்தில் சங்கமிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க தேர் திருவிழா இதுவாகும்.




# கல்முனை விவகாரம் தொடர்பில் பொது நிர்வாக அமைச்சுடன் சந்திப்பு

## அமைச்சின் செயலாளரைச் சந்தித்தார் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹரீஸ்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை விவகாரத்தில் நிரந்தர தீர்வு காண பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் கல்முனை விடயம் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்துள்ள 03 மனுதாரர்கள், இடையீட்டு மனுதாரர்கள் எல்லோரையும் அழைத்து அவர்களுடனும் கலந்துரையாடி நிரந்தர தீர்வுக்கு செல்ல வேண்டும்.

இவ்வாறு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது என்று உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

கல்முனை விவகாரம் தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸுக்கும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக்க பண்டாரவுக்கும் இடையில் அமைச்சில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,





நாளை 06 ஆம் திகதி இடம்பெறவுள்ள கல்முனை உப பிரதேச செயலக கலந்தாய்வுக் குழு கூட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன்போது கல்முனை உப பிரதேச செயலக விடயத்தை அவருக்குத் தெளிவுபடுத்தினோம். குறிப்பாக 2023 நவம்பரில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தா. கலையரசன் தாக்கல் செய்திருந்த வழக்கின் இடைக்கால தீர்ப்பாக மனுதாரர் கலையரசன் முன்வைத்திருந்த பிரார்த்தனைகளான, அந்த உப செயலகத்தை முழு பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துதல், நிரந்தர கணக்காளர் நியமனம், நிரந்தர பிரதேச செயலாளர் நியாயம் போன்றவற்றை நீதிமன்றம் நிராகரித்து வழங்கிய தீர்ப்பு தொடர்பில் அமைச்சரின் செயலாளருக்கு விளக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் நீதிமன்ற தீர்மானத்துக்கு மாற்றமாக அமைச்சு தீர்மானங்களை எடுக்கும் போது ஏற்படும் சட்டச் சிக்கல்களும் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நிரந்தர தீர்வு காண அமைச்சு நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் இவ்விடயம் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்துள்ள சகல மனுதாரர்கள், இடையீட்டு மனுதாரர்கள் எல்லோரையும் அழைத்து அவர்களுடனும் கலந்துரையாடி நிரந்தர தீர்வுக்கு செல்லவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.-என்றார்.

இந்த விடயம் தொடர்பில் எழுத்து மூல மகஜரும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக்க பண்டாரவிடம் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கையளித்துள்ளார்.

# அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் 2025 கம்பன் விழா இலக்கியப் போட்டிகள்

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் 2025ஆம் ஆண்டுக்கான கம்பன் விழா இலக்கியப் போட்டிகளது விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைக் கம்பன்கழகம் ஆண்டுதோறும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாகக் கம்பன் விழாக்களை நடத்திவருகிறது. அந்த விழாக்களின் வரிசையில் 2025 ஆம் ஆண்டுக்கான கொழும்புக் கம்பன் விழா, இவ்வாண்டின் பிற்பகுதியில் நடத்தப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த பேச்சுப் போட்டி, அமரர் பொன் பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப் போட்டி, நாவலர் நற்பணி மன்ற அனுசரணையுடன் நடத்தப்படும் திருக்குறள் மனனப் போட்டி, இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் அனுசரணையுடன் நடைபெறும் இஸ்லாமிய இலக்கிய போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

இந்த விழாவை முன்னிட்டு, கழகம் ஆண்டுதோறும் நடத்திவரும் அமரர் துரை. விஸ்வநாதன் ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டி, அமரர் பொன். பாலசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப் போட்டி, நாவலர் நற்பணிமன்ற அனுசரணையுடன் நடத்தப்படும் திருக்குறள் மனனப்போட்டி, இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் அனுசரணையுடன் நடத்தப்படும் இஸ்லாமிய இலக்கியப் போட்டி என்பவை பற்றிய விவரங்களைக் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

மேற்படி பேச்சுப் போட்டி, 02 பிரிவுகளாக இடம்பெறுவுள்ளன. மத்திய பிரிவுப் போட்டிகளில் 15 – 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்களும், மேற்பிரிவு போட்டிகளில் 18 – 30 வயதுக்கு உட்பட்ட போட்டியாளர்களும் கலந்து கொள்ளலாம். போட்டிகளில் கலந்து கொள்வோர் உடன் தரப்படும் தலைப்புகளில் தம் ஆற்றலை வெளிப்படுத்தவேண்டும்.

கவிதைப் போட்டி ஒரே பிரிவாக மட்டுமே இடம்பெறும். இதில் 14 – 30 வயதுக்கு உட்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம். கவிதைப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர், “வித்தகக் கம்பனின் சொற்திறம்” எனும் தலைப்பில் கவிதை ஒன்றை எழுதிக் கீழே தரப்பட்டுள்ள கழகத்தின் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அனுப்பப்படும் கவிதை புத்தாக்கமாக அமைய வேண்டும். கவிதை எவ்வடிவத்திலும் அமையலாம். தரமானதாகத் தேர்ந்தெடுக்கப்படும் முதல் பத்து கவிதைகளை எழுதியவர்கள், நேரில் அழைக்கப்பட்டு, இறுதிசுற்றுப் போட்டி நடைபெறும். ஏலவே இப்போட்டிகளில் கலந்து தங்கப்பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த, மற்றையோர் மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

நாவலர் நற்பணி மன்ற முன்னாள்த் தலைவர் அமரர் என். கருணையானந்தனின் நினைவாக நடைபெறும் திருக்குறள் மனனப் போட்டி, ஒரேபிரிவாக மட்டும் நடைபெறும். இப்போட்டியில் தரம் 5 முதல் 8 வரையான வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்வோர் அறத்துப்பாலின் இல்லறவியலில் உள்ள “இறைமாட்சி” முதல் “வலியறிதல்” வரையுள்ள பத்து அதிகாரங்களை (100 குறள்கள்) மனனம் செய்வதோடு அக்குறள்களுக்கான பொருளறிவையும் பெற்றிருத்தல் வேண்டும்.

இலக்கிய புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமரின் அனுசரணையோடு நடைபெறும் “இஸ்லாமிய தமிழிலக்கியப் பேச்சுப் போட்டியில்” பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். இப்போட்டி ஒரே பிரிவாக மட்டுமே இடம்பெறும்.

இப் போட்டியில் கலந்து கொள்வோர், உமறுப்புலவரின் கவித்துவம், ம. மு. உவைசின் தமிழ்ப் பணி, “கவிக்கோ” அப்துல் ரகுமானின் சிந்தனைகள் ஆகிய தலைப்புக்கள் ஏதேனும் ஒன்றில் தம் பேச்சாற்றலை வெளிப்படுத்தவேண்டும்.

போட்டியாளர்கள் சுயமாகத் தயாரிக்கப் பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப் பெயர், வயது, பிறந்ததிகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர், ஆகியவற்றைக் குறிப்பிட்டுத் தாம் கலந்து கொள்ளவுள்ள போட்டி விவரங்களையும் குறிப்பிட்டு, இல. 12, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு – 6 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

# சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் 12ஆவது தலைவர் பொறுப்பேற்பு நிகழ்வு








(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் 12 ஆவது புதிய தலைவர் பொறுப்பேற்பு நிகழ்வு அண்மையில் சுன்னாகத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

கழகத்தின் முன்னாள் தலைவர் கிருபாகரன் தனித்தா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் ரோட்டரி மாவட்ட ஆளுநர் டெல்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ரோட்டரி முன்னாள் மாவட்ட ஆளுநர், ரோட்டரி தெரிவு மாவட்ட ஆளுநர், ரோட்டரி மாவட்ட செயலாளர் மற்றும் ரோட்டரி முன்னாள் மாவட்ட செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது புதிய தலைவராகச் சிபோஜா தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நிகழ்வில் விசேட அம்சமாகக் கழகத்தின் இதழான கமலி நூல் வெளியீட்டு நிகழ்வு மற்றும் முன்னாள் தலைவர் கிருபாகரனின் நினைவு நிகழ்வு ஆகியனவும் இடம்பெற்றன.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# 2025 வடமாகாண விளையாட்டு விழாவில் முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாம் இடம்!

(பா.சதீசன் )

2025 ஆம் ஆண்டுக்கான வடமாகாண விளையாட்டு விழாவில் முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்தும் 5 ஆவது தடவையாகவும் குறைந்த வளங்கள், குறைந்த சனத்தொகையுடன் வடமாகாணத்தில் 2 ஆம் நிலையைத் தமதாக்கியது முல்லைத்தீவு மாவட்டம்.

கடந்த சனி ஞாயிறு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வவுனியா ஓமந்தை விளையாட்டரங்கில் நடைபெற்ற வடமாகாண இறுதி விளையாட்டு நிகழ்வானது ஆண்கள் உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் நிகழ்வுகளுடன் நடைபெற்று முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த விளையாட்டு விழாவில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

வடக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண விளையாட்டு விழா ஓமந்தையிலுள்ள விளையாட்டுத் திடலில் வடமாகாண அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் சிறப்பு விருந்தினராகவும், வவுனியா மாவட்டச் செயலாளர் பி.ஏ.சரத் சந்திர மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.குணபாலன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

2025 ஆம் ஆண்டின் நடைபெற்ற வடமாகாண அனைத்து விளையாட்டு நிகழ்வுகளிலும் பெற்றுக்கொண்ட பதக்கங்களில் அடிப்படையில் 1 ஆம் இடம் யாழ்ப்பாணம் மாவட்டம், 2 ஆம் இடம் முல்லைத்தீவு மாவட்டம், 3 ஆம் இடம் வவுனியா மாவட்டம், 4ஆம் இடம் மன்னார் மாவட்டம், 5ஆம் இடம் கிளிநொச்சி மாவட்டம் பெற்றுக் கொண்டன.








## மன்னாரில் பூரண கடையடைப்பு

# 2ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் அமைக்க மக்கள் எதிர்ப்பு

## 2 ஆவது நாளாகத் தொடரும் போராட்டம்




**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் தீவு பகுதியில் புதிதாக இரண்டாம் கட்டம் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தற்போது மன்னார்- மதவாச்சி பிரதான வீதியூடாகக் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்காகக் கொண்டுவரப்படும் பொருள்களை மன்னார் நகருக்குள் கொண்டு வருவதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இன்று செவ்வாய்க்கிழமை (5) மன்னாரில் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் இரண்டாவது நாளாக இன்று செவ்வாய்க்கிழமை (5) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்துக்குப் பூரண ஆதரவை வழங்கும் வகையில் மன்னார் நகர பகுதியில் உள்ள ஒரு சில உணவகங்களை தவிர அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன.

மீனவர்கள் கடற்தொழிலுக்கு செல்லாது குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

மேலும் மன்னார் தீவுக்குள் இரண்டாம் கட்ட காற்றாலை திட்டங்களுக்கான மூலப் பொருள்கள் எதுவும் தீவுப் பகுதிக்குக் கொண்டு வரக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு தொடர் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இரண்டாவது நாளாக இன்று செவ்வாய்க்கிழமை (5) இடம்பெற்ற இந்த அமைதி போராட்டத்தில் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், அருட்தந்தையர்கள், பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், மீனவ அமைப்புகள், வர்த்தகர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மன்னார் சௌத்பார் பகுதியில் உள்ள வீதிகள் நேற்றுத் திங்கட்கிழமை (4) இரவு காற்றாலை மின் கோபுரங்களை கொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் திடீரெனப் புனரமைப்புச் செய்யப்பட்ட நிலையில் மக்களின் எதிர்ப்புக் காரணமாக குறித்த பணிகள் இடை நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# மன்னாரில் 2ஆம் கட்ட காற்றாலை மின்திட்டம் குறித்து கலந்துரையாடல்

## நாடாளுமன்ற வளாகத்தில் ஜனாதிபதியும் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் என்கின்றார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.



**(மன்னார் நிருபர்)**

மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி வேலைத் திட்டம் தொடர்பில் நாளை மறுதினம் வியாழக்கிழமை (7) நாடாளுமன்ற வளாகத்தில் அமைச்சர்கள் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று செவ்வாய்க்கிழமை (05) நாடாளுமன்ற அமர்வின் போது அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் கேள்வி ஒன்றை எழுப்பி இருந்தேன்.

காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து மன்னார் மாவட்டத்தில் தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே மன்னாரில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கும் ஜனாதிபதியை சந்தித்து குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாட வாய்ப்பை ஏற்படுத்தி தருமாறு கோரி இருந்தேன்.

நானும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோரும் இணைந்து இதற்குப் பொறுப்பான அமைச்சரைச் சந்தித்துரையாடினோம்.

இந்த உரையாடலின் பலனாக எதிர் வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு முக்கிய பிரதி நிதிகளுடன் அரச அதிபர் தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் குறித்த கூட்டம் இடம்பெறவுள்ளது. ஜனாதிபதியும் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் உள்ளது.

குறித்த கலந்துரையாடல் இடம்பெறும் வரை எவ்வித நகர்வும் முன்னெடுக்கப் படாது என்று உரிய அமைச்சர் தெரிவித்துள்ளார். குறித்த கூட்டத்தில் இறுதி முடிவை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.- என்றார்.

# திருமறைக் கலாமன்ற மாணவிகள் மூவரின் பரதநாட்டிய அரங்கேற்றம்

லண்டனில் செயற்படும் ‘ சாஸ்வதம்’ அமைப்பின் அனுசரணையுடன் திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன மாணவிகள் மூவரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

சாஸ்வதம் அமைப்பு திருறைக் கலாமன்றத்துடன் இணைந்து முன்னெடுக்கும் ‘ உலகளாவிய பாரம்பரிய நடன விழா-2025’ இன் சிறப்பம்சமாக இந்தப் பரதநாட்டிய அரங்கேற்றம் இடம்பெறுகின்றது.

இதன்போது செல்வி ஜனுக்சா வெஸ்லி ஜு’ட்ஸன், செல்வி றக்சிகா ரஜிகரன், செல்வி ஜெனிலியா யூட் கிறிஸ்ரியன் ஆகிய மாணவிகளது அரங்கேற்றமே இடம்பெறவுள்ளது.

இவர்கள் கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன ஆசிரியர்களில் ஒருவரான ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவிகளாவர்.

இந்தியா, சென்னை கலாஷேத்ரா அறக்கட்டளையின் முன்னாள் முதல்வர், ஓய்வுநிலைப் பேராசிரியர் ஏ .ஜெனார்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ள



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசாவும், சிறப்பு விருந்தினராக திருமறைக் கலாமன்ற நிர்வாக இயக்குநர் அருள்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் ‘சாஸ்வதம்’ அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜாவும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் நடனத்துறை சார்ந்த 15 வரையிலான மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# சத்துருக்கொண்டான் படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்க வேண்டும்

## சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு தலைவர் வைரமுத்து குழந்தைவடிவேல் கோரிக்கை



(வாலகிருஸ்ணா)

கிழக்கில் ஊர்காவல் படையின ராலும் இராணுவத்தினராலும் நடத்தப்பட்ட மிகப்பெரும் படுகொலையான சத்துருக் கொண்டான் படுகொலை தொடர்பில் சர்வ தேச ரீதியான விசாரணை முன்னெடுக் கப்படவேண்டும். அந்தப் படுகொலை நடைபெற்ற இராணுவமுகாமில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று சத்துருக்கொண்டான் படு கொலை நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு தலைவர் வைரமுத்து குழந்தைவடிவேல் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990. 09.09 அன்று சத்துருக்கொண்டான் பனிச்சையடி கொக்குவில் பிள்ளை யாரடி ஆகிய கிராமங்களில் 184 பேர் படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் இந்தப் படுகொலை செய்யப்பட்டது. இந்தப் படுகொலைக்கு நேரடியாக சாட்சியங்க ளும் இருக்கின்றன. இந்த படுகொலை யில் நேரடியாக பாதிக்கப்பட்டவன் என்ற சார்பில் இந்தப் படுகொலைக்கு விசா ரணை வேண்டும். அத்தோடு புதிய அரசில் படுகொலைகள் இடம்பெற்ற அனைத்து இடங்களும் தோண்டப்பட்டு கொண்டிருக்கின்றன.

செம்மணி – சித்துப்பாத்தி தோண்டப் பட்டுக் கொண்டிருக்கின்றது. அதே நேரத் தில் கிழக்கு மாகாணத்தில் மிகக் கொடூரமாக நடந்த படுகொலை என்றால் சத்துருக்கொண்டான் படுகொலை. இந்த படுகொலை சத்துருக்கொண்டானில் அமைந்த ராணுவ முகாமில் 184 பேரை அழைத்து கொண்டு செல்லப்பட்டு வாளாலும் கத்தியாலும் வெட்டி டயர்கள் போட்டு எரித்து இன்று இதற்கான நீதி இதுவரைக்கும் கிடைக்கவும் இல்லை.

இரண்டு ஆணை குழுவில் நான் சாட்சிகள் தெரிவித்துள்ளேன் ஒன்றும் சந்திரிகா அம்மையார் கால ஆணைக் குழுவில் சாட்சிகள் தெரிவித்திருந்தேன் ஆனால் இன்றும் நீதி கிடைக்கவில்லை. இதில் நேரடியாக சந்திரிகா அம்மை யார் ஒரு ஆனைக்குழுவை நிறுவி இதில் ஓய்வு பெற்ற ஒரு நீதி அரசர் பாலகிட்ணர். விசாரணை செய்ததில் நான்கு இலங்கை ராணுவத்தினர் இனங்காணப்பட்டு பெயர்களும் இங்கே கூறப்பட்டது.

இதில் முக்கியமான சூத்திரதாரி பிரிகேடியர் பேர்சி பெனாண்டோ, கேப் டன் ஹெரத், கேப்டன் வர்ணகுலசூரிய, கேப்டன் விஜயநாயக்க இந்த நால்வரும் அந்த ஆணைகுழுவால் இவர்கள்தான் படுகொலைக்கு முக்கிய சூத்திரதாரி என்று இனங்காணப்பட்டு இதுவரைக்கும் எந்த நீதியும் கிடைக்கப்பெறவில்லை.

எனவே இந்த படுகொலையை உடனடி யாக இந்த புதிய அரசு இதனைச் சர்வ தேச விசாரணைக்குக் கொண்டு செல்ல வேண்டும். உள்நாட்டு விசாரணை யில் எந்த நம்பிக்கையும் எங்க ளுக்கு இல்லை 1990 ஆம் ஆண்டு படு கொலை செய்யப்பட்டு இதுவரை எதுவும் கிடைக்கவில்லை. இதனைச் சர்வதேச விசாரணைக்குக் கொண்டு சென்று விசாரணை செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் இந்த படுகொலை தற்பொழுது அந்த முகாம் அமைந்தி ருந்த இடத்தில் அகழ்வு செய்தால் நிறைய எலும்புக்கூடுகள் எடுக்கலாம் என்பதனை கேட்டுக்கொண்டு இந்த பாதிக்கப்பட்டவன் எனது அம்மா, அப்பா, தம்பி, தங்கை, அக்காவின் பிள்ளைகள் மூன்றும், அம் மம்மா, என எனது எனது குடும்பத்தில் 10 பேர் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். இதனை சர்வதேசம் விசாரணை செய்ய வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக கேட்டுக் கொள்கின்றோம்.

09.09.1990 ஆம் ஆண்டு இந்த படுகொலை எவ்வாறு இடம் பெற்றது என்றால் சத்துருக்கொண்டான் பணிச் சையடி பிள்ளையாரடி, கொக்குவில் ஆகிய கிராமங்களில் அந்த நேரம் ஏற்க னவே முஸ்லிம் ஊர் காவல் படையினர் கள் வந்து. எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்று எல்லாம் புல னாய்வு செய்து அனைத்து மக்களையும் கொடூரமாக படுகொலை செய்ததால் இதற்கு நீதி கிடைக்க வேண்டும். சர்வ தேச விசாரணைக்கு கொண்டு போக வேண்டும் என்று கேட்டுக் கொள்கின் றோம்.– என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பின ரும் மற்றும் சத்துருக்கொண்டான் படு கொலை நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு உறுப்பினருமான தயாளகுமார் கௌரி,

கடந்த காலங்களில் நடைபெற்றது இதில் அதிகமாத் தமிழ் மக்கள் பாதிக் கப்பட்டது அனைவரும் அறிந்த உண்மை.

தற்பொழுது இந்த இலங்கையில் ஆட்சி மாற்றம் வந்தபோது, பல படு கொலைகளுக்கான நீதிகள் வேண்டப் பட்ட நிலையில் குறிப்பாகச் செம்மணி படுகொலைக்காக – செம்மணி புதை குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் மனித உரி மைகளின் ஆணையாளர் விஜயம் மேற் கொண்டு போது, இதற்கான நீதிகளை எங்களுடைய இழப்புகளை சந்தித்த சமூகம் எதிர்பார்த்து இருந்தது. இலங் கைக்கும் இதற்கான நீதி கிடைக்காது என்ற பட்சத்தில் அந்த ஆணையாளரின் வருகையை நம்பி இதற்கான ஒரு சிறந்த பொறிமுறை கையாளப்படும் என எதிர் பார்த்து இருந்த. ஆனால் அவ்வாறான எதிர்பார்ப்பு ஏமாற்றத்தைச் சந்தித்த ஒரு நிலையாக நாங்கள் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

ஏனென்றால் உள்நாட்டுக்குள் இதற் கான ஒரு முறைகள் தீர்வுகள் எட்டப்படும் என்ற நிலைதான் அவரின் கருத்தாக அமைகிறது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் பல கூட்டுப் படுகொலைகள் நடந்திருக்கின்றன. அதில் குறிப்பாகச் சத்துருக்கொண்டான் படுகொலையா னது 1990.09.09 நடைபெற்றது. இந்த படுகொலை நடந்த பொழுது எனக்கு நான்கு வயது.

அதாவது இந்த படுகொலையில் உயிர் இழந்தவர்கள் 186 பேர் சத்துரு கொண்டான் ராணுவ முகாமில் படு கொலை செய்யப்பட்டனர். இதில் நேரடி யாக பாதிக்கப்பட்ட எங்களுடைய குடும்பம் சார்ந்தவர்கள் இந்த சம்பவங்களைச் சொல்லி கேட்டு வளர்ந்தவள்.

சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பனிச்சையடி, கொக்குவில் ஆகிய நான்கு கிராமங்களில் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதிகளில் ஒன்று கூடல் என்ற பெயரில் மாலை வேலை எங்களுடைய அப்பாவி பொதுமக்களை ராணுவ முகாமுக்கு அழைத்து சென்று வழமை போல் ஒன்று கூடல் நடத்துவார் வீட்டுக்கு திரும்பவும் வந்து விடலாம் என்ற நம்பிக்கையில் அந்த கிராமப் பகுதியில் இருந்தவர்கள் நகரப்புறங்களில் வந்து பாடசாலை முகாம் களில் சில குடும்ப அங்கத்தவர்கள் தரித் திருப்பார்கள் தங்களுடைய காணிகளை வீடுகளைப் போய் வந்துவிடலாம் என்று அங்கு நின்றவர்களை மாலை வேலை ஒன்று கூடல் என்ற பெயரில் அழைத்துச் சென்று மிகவும் மோசமான நிலையில் சிறுவர்கள் உட்பட கர்ப்பிணி தாய்மார் கள் வயோதிபர்கள் இளைஞர்கள் பெண் கள் அனைவரையும் படுகொலை செய்யப்பட்டனர் என்று அந்தச் சாட்சி யங்கள் நேரடியாக அந்த ஆணைகுழு வின் மூலம் வெளிக்கொணரப்பட்டபோதும் இன்று வரை எந்தவித நீதியும் கிடைக் காமல் அப்படியே இருக்கின்றது.

அதேபோல எனது அப்பா, அம்மா

தொடர்ச்சி▼

# சத்துருக்கொண்டான் படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்க வேண்டும்

தொடர்ச்சி▲

இந்த நகர்ப் புறங்களில் இருக்கக் கூடிய முகாம்களுக்கு அழைத்துச் சென்று வந்த பின்புதான் இந்தச் சம்பவம் நடந்தது குறிப்பாக எனக்கு நான்கு வயது என்னுடன் பக்கத்து வீட்டில் விளையாடிய சிறு பிள்ளைகள் படுகொலை செய்யப்பட்டனர். அதேபோல் நானும் அங்கு சிறிது நேரம் இருந்திருந்தால் நானும் படுகொலை செய்யப்பட்டிருப்பேன். அதில் நானும் ஒரு நபராக தான் இருந்திருப்பேன். இன்று வரை நான் இருக்கின்றேன் என்றால் இந்த நீதிக்கான வழிமுறை என்னால் செய்யப்பட்டு சர்வதேச விசாரணைக்கு செல்ல வேண்டும் – அழிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

தாமதம் இல்லாமல் தற்போதைய ஆட்சியில் இருக்கும் இந்த ஜனாதிபதி செம்மணி படுகொலை தோண்டப்படுவது போல் இந்த சத்துருக்கொண்டான் படுகொலை செய்யப்பட்ட இடத்தையும் தோண்டி எமக்கான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்.– என்றார்.




# எங்களை குறிவைப்பது நியாயமற்றது: ட்ரம்பின் மிரட்டலுக்கு இந்தியா பதிலடி

ரஷ்யாவில் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியாவுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்று எச்சரித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு இந்தியா பதலடி கொடுத்துள்ளது.

"ரஷ்யாவிடம் இருந்து இந்தியா பெருமளவில் கச்சா எண்ணெய் வாங்குவதுடன் மட்டுமல்லாமல், அவ்வாறு வாங்கிய எரிபொருள்களில் பெரும்பகுதியை திறந்த சந்தையில் அதிக லாபத்துக்கு விற்கிறது. ரஷ்யாவின் போர் ஆயுங்களால் உக்ரைனில் எத்தனை பேர் கொல்லப்படுகிறார்கள் என்பது பற்றி இந்தியாவுக்கு கவலையில்லை. இதன் காரணமாக, அமெரிக்காவுக்கு இந்தியா செலுத்தும் வரியை நான் கணிசமாக உயர்த்துவேன்" என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் எச்சரித்திருந்தார்.

இதற்கு பதிலடி தரும் விதமாக வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"உக்ரைன் போர் தொடங்கிய பின்னர் ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ததற்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளால் இந்தியா குறிவைக்கப்பட்டுள்ளது. உண்மையில், மோதல் வெடித்த பிறகு, வழக்கமாக கச்சா எண்ணெய் விநியோகம் செய்யும் நாடுகள் அனைத்தும் ஐரோப்பாவுக்கு திருப்பி விடப்பட்டதால் தான் ரஷ்யாவிலிருந்து இந்தியா இறக்குமதி செய்யத் தொடங்கியது. உலகளாவிய எரிசக்தி சந்தைகளின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்காக அந்த நேரத்தில் இந்தியாவின் இத்தகைய இறக்குமதிகளை அமெரிக்கா தீவிரமாக ஊக்குவித்தது.



இந்தியாவின் இறக்குமதிகள் என்பது இந்திய நுகர்வோருக்கு மலிவு விலையில் எரிபொருள் செலவுகளை உறுதி செய்வதற்காக மட்டுமே ஆகும். இது உலகளாவிய சந்தை சூழ்நிலையால் கட்டாயப்படுத்தப்படும் ஒரு தேவையாகும். இருப்பினும், இந்தியாவை விமர்சிக்கும் நாடுகளே ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன என்பம் கவனிக்கத்தக்கது. ரஷ்யாவுடன் அவர்கள் மேற்கொள்ளும் வர்த்தகம் என்பது எங்களைப் போல் தேச நலனுக்கான கட்டாயம் கூட அல்ல.

2024 இல் ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யாவுடன் 67.5 பில்லியன் யூரோ மதிப்பிலான இருதரப்பு வர்த்தகத்தைக் கொண்டிருந்தது. கூடுதலாக, 2023 இல் 17.2 பில்லியன் யூரோ மதிப்பிலான சேவை வர்த்தகத்தைக் கொண்டிருந்தது. இது அந்த ஆண்டு அல்லது அதற்குப் பிறகு ரஷ்யாவுடனான இந்தியாவின் மொத்த வர்த்தகத்தை விட கணிசமாக அதிகம். உண்மையில், 2024 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம், எல்,என்,ஜி, எனப்படும் திரவ இயற்கை எரிவாயு இறக்குமதியை 16.5 மில்லியன் தொன்களாகக் குறைத்தது. இது, 2022-ஆம் ஆண்டில் 15.21 மில்லியன் தொன்களாக இருந்தது.

ஐரோப்பா - ரஷ்யா வர்த்தகத்தில் எரிசக்தி மட்டுமல்ல, உரங்கள், சுரங்கப் பொருள்கள், இரசாயனங்கள், இரும்பு மற்றும் எ:கு மற்றும் இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்களும் அடங்கும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, அதன் அணுசக்தித் தொழிலுக்கு யுரேனியம் ஹெக்ஸா:ப்ளூரைடு, அதன் மின்சார உற்பத்தித் தொழிலுக்கு பலேடியம், உரங்கள் மற்றும் ரசாயனங்கள் ஆகியவற்றை ரஷ்யாவில் இருந்து தொடர்ந்து இறக்குமதி செய்கிறது.

இந்த விவகாரத்தில், இந்தியாவை குறிவைப்பது நியாயமற்றது. எந்தவொரு பெரிய நாடுகளின் பொருளாதாரத்தையும் போலவே, இந்தியாவும் தனது நாட்டின் நலன்களையும், பொருளாதாரப் பாதுகாப்பையும் உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்," என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடிகை ரம்யாவுக்கு மிரட்டல் விடுத்த 4 பேர் பெங்களூர் பொலிஸால் கைது

முன்னாள் எம்.பியும் நடிகையுமான ரம்யாவுக்கு சமூக வலைதளங்களில் ஆபாச குறுஞ்செய்தியும் பலாத்கார மிரட்டலும் விடுத்த 4 பேரை பெங்களூர் பொலிஸார் நேற்று கைது செய்தனர். மேலும் 1 இற்கும் மேற்பட்டோரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

கன்னட நடிகர் தர்ஷன் தனது காதலி பவித்ரா கவுடாவுக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய ரேணுகா சாமி என்ற ரசிகரை அடித்து கொலை செய்த வழக்கில் கடந்த ஆண்டு கைதானார். அவருக்கு இரு மாதங்களுக்கு முன்பு கர்நாடக உயர் நீதிமன்றம் பிணை வழங்கியது. இதற்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

இதுகுறித்து கன்னட திரைப்பட நடிகையும் முன்னாள் எம்.பியுமான ரம்யா, "கொல்லப்பட்ட ரேணுகா சாமியின் குடும்பத் துக்கு நீதி கிடைக்க வேண்டும்" என சமூக வலைதளத்தில் பதிவிட்டார்.



இதனால் ஆத்திரமடைந்த நடிகர் தர்ஷனின் ரசிகர்கள் அவருக்கு சமூக வலைதளங்களில் ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியும், பலாத்கார மிரட்டலும் விடுத்தனர். இதுகுறித்து பெங்களூர் மாநகர பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் ரம்யா புகார் அளித்தார்.

இதையடுத்து பெங்களூர் மாநகர காவல் ஆணையர் சீமந்த்குமார் சிங் தலைமையிலான பொலிஸார் ரம்யாவுக்கு மிரட்டல் விடுத்தநபர்களை தேடி வந்தனர். அவர்களின் இன்ஸ்டாகிராம் பக்கத்தின் வாயிலாக கண்டறிந்து, பவன் கவுடா, ராஜேஷ், கங்காதரா, ஒப்பன்னா ஆகிய 4 பேரை நேற்று கைது செய்தனர்.

இதுகுறித்து பொலிஸ் ஆணையர் சீமந்த் குமார் சிங் கூறுகையில்,

"முன்னாள் எம்.பி. ரம்யாவுக்கு மிரட்டல் விடுத்த 4 பேரை கைது செய்திருக்கிறோம். இன்னும் 11 பேரின் அடையாளம், முகவரி ஆகியவற்றை கண்டறிந்திருக்கிறோம். விரைவில் அவர்களையும் கைது செய்வோம்." - என்றார்.

# எம்.பியிடம் நகைகள் கொள்ளை; குற்றவாளிகள் தப்பியோட்டம்

டில்லியில் நடை பயிற்சியில் ஈடுபட்டிருந்த மக்களவை உறுப்பினர் சுதாவின் நகையை அடையாளந் தெரியாத நபர்கள் பறித்துச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

தலைக்கவசம் அணிந்து வந்த நபர்கள் கழுத்தில் அணிந்திருந்த தங்க மாலையைப் பறித்துச் சென்றுள்ளனர் என மயிலாடுதுறை தொகுதி காங்கிரஸ் எம்.பி சுதா வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்நிலையில், டில்லி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

தப்பியோடியவர்களை கண்டறியும் பணியும் மும்முரமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வரிகளை மேலும் உயர்த்துவேன்: இந்தியாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

ரஷ்யாவிலிருந்து அதிக அளவில் எண்ணெய் வாங்கும் இந்தியா மீது வரிகளை உயர்த்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இது குறித்து தனது சமூக வலைதள பக்கத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில்,

"இந்தியா ரஷ்ய எண்ணெயை பெருமளவில் வாங்குவது மட்டுமல்லாமல், வாங்கிய எண்ணெயில் பெரும்பகுதியை திறந்த சந்தையில் அதிக லாபத்திற்கு விற்கிறது. ரஷ்ய போர் இயந்திரத்தால் உக்ரைனில் எத்தனை பேர் கொல்லப்படுகிறார்கள் என்பது பற்றி அவர்களுக்கு கவலையில்லை. இதன் காரணமாக, அமெரிக்காவிற்கு இந்தியா செலுத்தும் வரியை நான் கணிசமாக உயர்த்துவேன். இந்த விஷயத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி." என்று தெரிவித்துள்ளார்.



கடந்த ஜூலை 30 அன்று, டொனால்ட் ட்ரம்ப் இந்தியப் பொருள்களுக்கு 25 சதவீத வரியை அறிவித்தார். மேலும் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் மற்றும் ஆயுதங்கள் வாங்கினால் கூடுதல் வரி விதிக்கப்படும் எனவும் எச்சரித்தார். ரஷ்யா உக்ரைனுடன் சமாதான ஒப்பந்தத்துக்கு ஒப்புக் கொள்ளாவிட்டால், ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதைத் தொடரும் நாடுகளுக்கு 100 வீதம் வரை கூடுதல் வரிகளை விதிப்பது குறித்து பரிசீலிப்பதாகவும் ட்ரம்ப் கூறியிருந்தார்.

கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவின் ரஷ்ய எண்ணெய் இறக்குமதி வேகமாக வளர்ந்துள்ளது. 2021 இல் உக்ரைன் போருக்கு முன்பு, ரஷ்யாவிடமிருந்து 3 வீதம் மட்டுமே எண்ணெய் வாங்கிய இந்தியா, தற்போது 35 வீதம் முதல் 40 வீதம் வரை எண்ணெய் வாங்கி வருகிறது.

முன்னதாக, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முதன்மை ஆலோசகர்களில் ஒருவரான ஸ்டீபன் மில்லர்,

"இந்தியா, ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதை நிறுத்த வேண்டும் என்று ட்ரம்ப் விரும்புகிறார். ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதன் மூலம் உக்ரைன் உடனான போருக்கு இந்தியா தொடர்ந்து நிதியுதவி செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று ட்ரம்ப் மிகத் தெளிவாகக் கூறுகிறார். ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதில் இந்தியா அடிப்படையில் சீனாவுடன் நெருக்கம் காட்டுகிறது என்பதை அறிந்து மக்கள் அதிர்ச்சியடைவார்கள்." என்று கூறியிருந்தார்.

# பிரேசில் முன்னாள் ஜனாதிபதியை வீட்டுக் காவலில் வைக்க உத்தரவு

பிரேசிலின் முன்னாள் வலதுசாரி ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவை வீட்டுக் காவலில் வைக்க அந்நாட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு சதி செய்ததாக எழுந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் விசாரணையில் உள்ளார்.

எனினும், அவர் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கிறார்.

போல்சனாரோவை விசாரிக்கும் பொறுப்பான நீதிபதி அலெக்ஸாண்ட்ரே டி மோரேஸ், கடந்த மாதம் தனக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவுகளை போல்சனாரோ பின்பற்றாததால் இந்த தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதாகக் கூறினார்.

இந்த உத்தரவுக்கு பதிலளிக்கும் விதமாக, போல்சனாரோவின் சட்டக் குழு எந்தவொரு தடை உத்தரவையும் மீறவில்லை என்றும் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதாகவும் கூறியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.




இதனிடையே, ஞாயிற்றுக்கிழமை பிரேசிலின் பல்வேறு நகரங்களில் போல்சனாரோ ஆதரவு பேரணிகள் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தெருவோரக் கழிப்பறைகளுக்கு எதிராக பிரான்ஸில் பெண் குழுக்கள் கண்டனம்

பிரான்ஸில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தெருவோரத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளிக் கழிப்பறைகளுக்கு எதிராக பெண் உரிமை இயக்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இக்கழிப்பறை பொதுவாக ஆண்கள் பயன்படுத்துவதற்கு இலகுவாக வடிவமைக்கப்பட்டுள்ளதால் அதனை பெண்கள் பயன்படுத்த முடியாத சூழல் நிலவுவதாகவும், இது சமூக சமத்துவத்தின் அடிப்படையை மீறும் செயல் எனவும் பெண்களின் பாதுகாப்பும், சமத்துவ உரிமையும் இங்கு இழப்படுகின்றன எனவும் பெண் உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.



மேலும் இவ்வகை கழிப்பறைகள் நீர் இல்லாமல் இயங்குவதால் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை எனவும் பொது மக்கள் வீதிகளில் சிறுநீர் கழிப்பதை தவிர்க்கத்தான் இவ்வாறான கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் நகராட்சி நிர்வாகம் விளக்கம் அளித்துள்ள போதும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இதனை பயன்படுத்த முடியாதநிலமை காணப்படுவதாகவும் இதனால் அவர்களது உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்த கழிப்பறை விடயம் அந்நாட்டில் பெரும் பேசு பொருளாகியுள்ள நிலையில் பல இடங்களில் பெண் உரிமை அமைப்புக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, சில இடங்களில் போராட்டக்காரர்களால் இந்த கழிப்பறைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 05/08/2025

## தங்கப் புதையல் கண்டுபிடிப்பு

கனடாவில் புதிய தங்கம், செம்பு நிறைந்த கனிம இருப் புகள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கனடாவின் Toodoggone எரிமலை வலயம் பகுதியில் உள்ள JOY திட்டத்தில், AuRORA எனப்படும் புதிய C02►








# ட்ரம்பின் வரிவிதிப்பு காரணமாக கனடாவில் விலைகள் உயர்ந்தன

**அமெரிக்காவின் வர்த்தக் கூட்டாளர் நாடுகள் மீது அந்நாட்டின் ஜனாதிபதி யான டொனால்ட் ட்ரம்ப் வரிகளை விதித்துவருகிறார்.**

**சமீபத்தில், கனடாவிலிருந்து அமெரிக் காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான வரிகளை 25 சதவிகி தத்திலிருந்து 35 சதவிகிதமாக உயர்த்தி யுள்ளார் ட்ரம்ப். வரிவிதிப்பால் விலை உயர்ந்துள்ள விடயங்கள்:**

ட்ரம்பின் வரிவிதிப்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக் காவிலிருந்து கனடா இறக்குமதி செய்யும் பொருள்கள் மீது கனடா வரிகள் விதித்துள்ளது.

இந்த வரிவிதிப்பால், பல பொருள் களின் விலைகள் உயர்ந்துள்ளன.

1. ஃப்ரிட்ஜ் மற்றும் வாஷின் மெஷின்கள்

ஃப்ரிட்ஜ், ஃப்ரீஸர் ஆகிய உப கரணங்கள் 2 சதவிகிதம் விலை உயர்ந்துள்ளன.

டிஷ் வாஷர் முதலான உபகர ணங்கள் 4.5 சதவிகிதம் விலை உயர்ந் துள்ளன.

கனடாவில் விற்கப்படும் இந்த உபகரணங்கள் எல்லாமே அமெரிக்கா விலிருந்து இறக்குமதி செய்யப்படு பவை அல்ல.

கனடா மக்கள் அவற்றிற்கு மாற் றாக கனேடிய உபகரணங்களை வாங் கினால் இந்த விலை உயர்விலிருந்து தப்பலாம்.

2. புதிய மற்றும் பயன்படுத்தப்பட்ட கார்கள்:

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கார்கள் மீது அமெரிக்கா 25 சதவிகித வரிகள் விதித்தது.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகை யில் அமெரிக்காவிலிருந்து இறக்கு மதி செய்யப்படும் கார்களுக்கு கனடா வரி விதித்ததால், கனடாவில் கார்கள் விலை 5 சதவிகிதம் உயர்ந்துள் ளது.

3. பீனட் பட்டர், கேன்களில் அடைக் கப்பட்ட சூப் மற்றும் பிற பலசரக்கு பொருள்கள்:

பழச்சாறுகள் விலை 7.5 சதவிகிதம் அதிகரித்துள்ளன. கேன்களில் அடைக் கப்பட்ட சூப் 8 சதவிகிதம் விலை உயர்ந்துள்ளது.

டொமாட்டோ கெச்சப், சாஸ், பீனட் பட்டர், ஜாம், வான்கோழி, பாஸ்தா மற்றும் ஆரஞ்சுகள் விலையும் அதி கரித்துள்ளது.

4. உடைகள் மற்றும் காலணிகள்:

உடைகள் மற்றும் காலணிகள் விலைகள், கடந்த ஆண்டை ஒப்பிடும் போது 2 சதவிகிதம் அதிகரித்துள்ளன.

5. கட்டுமானப் பணி:

வீடுகள் கட்ட பயன்படுத்தப்படும் கண்ணாடி ஜன்னல்கள், கம்பள விரிப் புகள் முதலான விடயங்கள் விலை அதிகரித்துள்ளதுடன், பிளம்பிங் முத லான பணிகளுக்கான செலவும் அதி கரித்துள்ளது.

மேலும், அமெரிக்கா கனடாவுக் கிடையிலான இந்த வர்த்தகப்போரால், கனேடிய பொருளாதார வளர்ச்சியி லும் வீடுகள் வாங்குதல், விற்றல் மற்றும் கட்டுதல் ஆகிய பணிகளிலும் தொய்வு ஏற்படும் என்றும் துறைசார் வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

# கனடாவின் நோவா ஸ்கோஷியாவில் காணாமல் போன பெண் சடலமாக மீட்பு

கனடாவின் நோவா ஸ்கோஷியாவின் நிக்டாக்ஸ் பகுதியில் இருந்து காணாமல் போனார் என கூறப்பட்ட பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திங்கள் கிழமை காலை 7:25 மணியளவில், தரைத் தேடுதல் மற்றும் மீட்பு தன்னார்வலர்கள், 32 வயதான கெர்ஸ்டின் மேரி வெட்டரை, அவர் கடைசியாகக் காணப்பட்ட இடத்திற்கு அருகிலுள்ள காட்டில் கண் டெடுத்ததாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கெர்ஸ்டின் வெட்டர், சனிக்கிழமை மதியம் 1:25 மணிக்கு கடைசியாகக் காணப்பட்டதாக ஞாயிற்றுக் கிழமை வெளியிடப்பட்ட பொலிஸ் அறிக்கையில்






குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல்களை சேகரிக்க பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# கனடாவில் பரவும் காட்டுத்தீ; அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

கனடா மாகாணங்களில் பற்றி எரிந்து வரும் காட்டு தீ காரணமாக ஏற்பட்டுள்ள புகை மண்டலம் அமெரிக்காவின் பல பகுதிகளுக்கும் பரவி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக நியூயோர்க், நியூ ஜெர்சி, பென்சில்வேனியா உள்ளிட்ட பகுதிகளில் புகை மண்டலம் சூழ்ந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், அப்பகுதியில் வசிப்பவர்கள் கண் எரிச்சல், மூச்சுத்திணறல் உள்ளிட்ட பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகை காரணமாக காற்றின் தரம் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளதாகவும், புற்றுநோய் மற்றும் சுவாச நோய்களுக்குள்ள ஆபத்து அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் வெளியே செல்லும் போது முகக் கவசத்தை அணிவது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் சஸ்கட்சிவான், மனிடோபா, பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பிரட்டா மற்றும் ஒன்டாரியோ மாகாணங்களில் காட்டு தீ அதிகமாக பரவி வருகின்றது.

உலகின் முக்கிய நகரங்களில் இரண்டாவது மிகவும் மாசுபட்ட நகரமாக கனடாவின் - டொராண்டோ தரப்படுத்தப்பட்டது.

சுவிஸ் காற்று தர கண்காணிப்பு நிறுவனமான IQAir குறித்த தரவரிசையை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் டொராண்டோவின் காற்று தரம் தற்போது உலகளவில் மிக மோசமானவற்றில் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கனடாவில் பரவும் காட்டுத் தீ புகை தெற்கு ஒன்டாரியோவின் பெரும் பகுதியை பாதிக்கும் என்றும் இது இன்று செவ்வாய்க் கிழமை வரை நீடிக்கும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

திங்கள் கிழமை காலை 6 மணியளவில், டொராண்டோ நகர மையத்தின் காற்று தர ஆரோக்கிய குறியீடு ஆறாக இருந்தது, இது மிதமான அபாயமாக கருதப்படுகிறது என்று ஏர் குவாலிட்டி ஒன்டாரியோ தெரிவித்துள்ளது.




## தங்கப் புதையல்...

( C01 தொடர்ச்சி)

தங்கம் மற்றும் செம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இது உலகின் கண்கள் திரும்பி நோக்கும் வகையில் உருவெடுத்து வருகிறது .

இந்த மண்டலம், புகழ்பெற்ற Golden Triangle இல் இணைந்தாலும், அதிகமாக ஆய்வு செய்யப்படாத பகுதி ஆகும். 2024 ஆம் ஆண்டு முதல் துரிதமாக ஆய்வுகள் நடக்க, Freeport-McMoRan நிறுவனம், 110 மில்லியன் டொலர் முதலீடு செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன் மூலம் JOY திட்டத்தில் 70 வீத பங்குகள் பெற்றுக்கொள்ள முடியும். Amarc Resources இந்த வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது AuRORA மண்டலம், induced polarization என்ற தொழில்நுட்பத்தின் மூலம் கண்டறியப்பட்டு, 0.9 மைல் நீளமான மற்றும் 0.3 மைல் அகலமான செம்பு மற்றும் தங்க சுரங்கப் பசுமை பகுதியாக கண்காணிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தொன் கனிமத்தில் 1 கிராம் தங்கம் இருப்பது இந்த கண்டுபிடிப்பை வணிக ரீதியில் லாபகரமாக மாற்றுகிறது. மேலும், Quartz-magnetite veinlets மூலம் chalcopyrite, bornite போன்ற செம்பு கனிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.





# காசாவிற்குள் மனிதாபிமான உதவிகளை வான்வழியாக வீசியுள்ளது கனடா அரசு

பட்டினியை எதிர்கொண்டுள்ள காசாவிற்குள் வான்வழியாக மனிதாபிமான உதவிகளை வீசியுள்ளதாக தெரிவித்துள்ள கனடா, இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மீறுவதாக குற்றம்சாட்டியுள்ளது.

சி.சி. - 130 ஜே ஹேர்குலிஸ் விமானத்தை பயன்படுத்தி கனடாவின் ஆயுதப்படையினர் காசாவுக்குள் மனிதாபிமான உதவி பொருள்களை போட்டதாக கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி காசாவிற்கு கனடா, 21600 பவுண்ட் மனிதாபிமான உதவிகளை போட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

கனடாவின் ஆயுதப்படையினர் தங்கள் விமானங்களை பயன்படுத்தி முதல்தடவையாக காசாவுக்குள் மனிதாபிமான பொருள்களை போட்டுள்ளனர் என கனடா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கனடா மற்றும் எகிப்து உட்பட ஆறுநாடுகள் 120 உணவுப்பொதிகளை காசாவிற்குள் வீசியுள்ளன என எகிப்து தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் கட்டுப்பாடுகள் மனிதாபிமான அமைப்புகளிற்கு சவாலை தோற்றுவித்துள்ளன என தெரிவித்துள்ள கனடா, மனிதாபிமான உதவிகளை தடுப்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயல் இதனை உடனடியாக கொண்டுவரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.











